UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1979-5-1?
PERIODICALS DIVISION
LIBRARY

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 1 ஜ-அகிர்: 17 இதழ்: 95
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-5-79

கீழ்கண்டவைகளுக்கு ஏற்றுமதி செய்பவர்கள்
தேவை
சுருசெட்டை வெள்ளை, கறுப்பு
கடல் அட்டை, கடல் பாசி,
இறுல், சிங்க இறுல், நண்டு
தொகையாகத் தரக்கூடியவர்கள்
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
குட்வில் (T) ரவல்
Goodwill Travel
No 635, ஆஸ்பத்திரி வீதி,
[சிங்கள பாடசாலை முன்பாக]
யாழ்ப்பாணம்.

## சூருவளிக்கு 84 பேர் பலி!

சென்னை, மே 14
தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் சூருவளி, கடும் மழை ஆகியவற்ருல் இதுவரை 84 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் மட்டும் கடும் மழை, புயல் காரணமாக 18 பேர் பலியானுர்கள்

# ரூ. 80 கோடி கடனுதவி: சுவிஸ் அரசு வழங்குகிறது

(கொழும்பு)

சுவிற்சர்லாந்து சமஷ்டி அரசு இலங்கைக்கு, எண்பதுகோடி ரூபா கடனுதவிஅளிக்க முன்வந்துள்ளது. இது சம்பந்தமான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும்.

நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரெனி டி மெல் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனுகவே மேற்கண்ட நிதிஉதவியை சுவிஸ் அரசு இலங்கைக்கு வழங்குகிறது. இந்த நிதி உதவி சம்பந்தமாக இலங்கையிலுள்ள சுவிற்சர்லாந்து ராஜாங்க செயலாளருடன் நிதிதிட்டமிடல் அமைச்சர் திரு. ரெனி டி மெல் நேற்று கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தினர். இம்மாத இறுதியில் நிதியமைச்சர் சுவிற்சர்லாந்து செல்லும்போது மேற்படி கடனுதவி பற்றிய ஒப்பந்தம் சூரிச்சில் கைச்சாத்தாகும்.

## சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை!
### சட்டத்தரணிகள் வாதம் நிராகரிப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள அளவெட்டியைச் சேர்ந்த எஸ். சற்குணசிங்கம் என்னும் வாலிபரை தவணையின்போது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யாதது பெரும் பரபரப்புக்கும், சட்டவாதப் பிரதிவாதங்களுக்கும் இடமளித்தது.

சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஜே செல்வரத்தினம், மு. திருநாவுக்கரசு ஆகியோர் சந்தேகநபரை இத் தவணையின்போது ஆஜர்செய்யாதது எதற்காக என்று நீதிபதியிடம் பலத்த ஆட்சேபம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து சிறைச்சாலை பாதுகாவலர் நீதிபதியிடம் தமக்கு மேலிடத்திலிருந்து

[2ம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. கட்சி தேர்தல் பிரச்சாரம்:
### 2 அமைச்சர்கள்; 10 பிரதி அமைச்சர்கள் இன்றுவருகை

[யாழ்ப்பாணம்]

ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்யும்பொருட்டு இரு அமைச்சர்களும், பத்து பிரதி அமைச்சர்களும் இன்றுமாலை வருகின்றுர்கள்.

கடற்றெழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா, இளைஞர் விவகார அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் பத்து பிரதிஅமைச்சர்களும் இன்று மாலை சாவகச்சேரியில் தேர்தல் பிரச்சாரம் செய்வார்கள்.

17ம்தேதி வரை இக்குழுவினர் தங்கியிருந்து யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் பிரசாரம் செய்வார்கள் 17ம்தேதி நடக்கும் ஐக்கியதேசியக் கட்சிக் கடைசிக் கூட்டத்திலும் இவர்கள் உரைநிகழ்த்துவர். [கொ]

## காங்கிரஸ் வேட்பாளர் போட்டியிலிருந்து வாபஸ்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாழ் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் [14-வது அங்கத்தவர்] சட்டத்தரணி திரு. கந்தையா சற்குணநாதன், அபேட்சகர் பட்டியலில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்

காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலத்திற்கு திரு க சற்குணநாதன் அனுப்பியுள்ள விலகல் கடிதத்தில்; தவிர்க்க முடியாத காரணங்களாலும் தமிழ்மக்களின் ஒற்றுமையை வலியுறுத்துமுகமாகவும் தாம் இத்தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார் [கொ]

# தஞ்சை, நாகை, வேட்புமனு 16-ல் தாக்கல்; தேர்தல் ஜூன் 17

[சென்னை]

தஞ்சாவூர், நாகபட்டினம் லோகசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் அடுத்த மாதம் பதினேழாம் திகதி நடைபெறும். வாக்குகள் எண்ணும் வேலை அடுத்தநாள் பதினெட்டாம் திகதி காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும். தேர்தல் முடிவுகள் அன்றிரவு பத்து மணியளவில் அறிவிக்கப்படும்.

மேற்கண்ட விபரங்களை தேர்தல் ஆணையாளர் நேற்று சென்னையில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் தெரிவித்தார். இங்கு தெரிவிக்கப்பட்ட மேலும் சில விபரங்கள் வருமாறு!

தஞ்சாவூர் லோகசபைத் தொகுதியல் மொத்தம் 6 லட்சத்து 57 ஆயிரத்து 902 வாக்காளர்கள் இருக்கின்றுர்கள், நாகபட்டின லோக சபைத் தொகுதியில் 6 லட்சத்து 81 ஆயிரத்து 823 வாக்காளர்கள் இருக்கிறுர்கள்,

மேற்கண்ட இரண்டு தொகுதிகளிலும போட்டியிடும் வேட்பாளர்கள் தமது மனுக்களை இம்மாதம் 16ம் திகதி முதல் 23ம் திகதி வரை தாக்கல்செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு எவ்வித இடைவேளையும் இல்லாமல் அடுத்த மாதம் 17ம் திகதி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

### தேர்தல் முடிவுகள்

வாக்குகள் எண்ணும் வேலை 18ம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இரவு பத்து மணிக்கு முடிவடையும். தேர்தல் முடிவுகள் அநேகமாக இரவு பத்து மணியளவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பேராசிரியர் ஆறு. அழகப்பன் நாளை யாழ். வருகிறுர்



(யாழ்ப்பாணம்)

அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைப் பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பன் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றுர். இங்கு அவர் ஒரு வார காலம் தங்கியிருப்பார்.

கடந்த 10 ஆண்டுகளில் 150க்கு மேற்பட்ட நாடகம், நாடடுப்பாடல்கள், இலக்கிய ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ள இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக நூல் பிரசுரத் துறைத் தலைவராகவும், அப் பல்கலைக்கழக செனேட் மன்ற உறுப்பினராகவும் இருக்கின்றுர்.

[6ம் பக்கம் பார்க்க]

## பண்டமாற்று ஒப்பந்தம்
# காங்கேசன் சீமெந்து, உப்பு மாலைதீவு செல்கிறது

[யாழ்ப்பாணம்]

இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட பண்டமாற்று ஒப்பந்தத்துக்கமைய காங்கேசன் துறைமுகத்திலிருந்து மாலைதீவுக்கு உப்பும் சீமெந்தும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது

"எம். வி'— 'மோல்டிவ் எக்ஸ்போட்டர்' என்ற கப்பலில் 700 தொன் உப்பும் 250 தொன் சீமெந்தும் நேற்று காங்கேசன் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டது

அண்மையில் வர்த்தகக்கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு அத்துலத்முதலி மாலைதீவு அரசாங்கத்துடன் செய்துகொண்ட பண்டமாற்று உடன்படிக்கையின் கீழ் முதன்முறையாக இலங்கை உப்பு மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் மாலைதீவிருந்து மாசிக்கருவாட்டை கொள்வனவு செய்து அதற்குப் பதிலாக இலங்கையிலிருந்து உப்பு, சீமெந்து ஆகியவற்றை

[6ம் பக்கம் பார்க்க]

## அனல் காற்றுக்கு 97 பேர் பலி

பட்ணு, மே 14
பீகாரில் வீசும் அனல் காற்றுக்கு இதுவரை 97 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது [இ]

## சாவகச்சேரி நகரசபை கேள்வி விளம்பரம்

சாவகச்சேரி நகரசபையில் கடமைபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு கோலவுடைகள் தைத்து வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 29-5-79ம் திகதி நண்பகல் 12 30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1979ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி [25-5-79] நண்பகல் 12-30 மணி வரை கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூ. 5/-ம், கேள்விப் பிணைப்பணமாக ரூ. 50/-ம் இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் விசேட ஆணையாளர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கோலவுடைக்கான கேள்விகள், 1979' என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் 29-5-79 நண்பகல் 12-30க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும் அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியுள் இடப்படல்வேண்டும்.

சித்திகரமான கேள்விக்காரர் மேற்படி சேவையை திருப்திகரமாகச் செய்வோம் என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதுடன், குறிப்பிட்ட திகதிக்குள் இவ்வலுவலகத்திற்கு சமூகம் தந்து கோலவுடைகளுக்கான அளவுகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

த. நவரத்தினராசா
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
10-5-79. 2442

---

செம்பியன்பற்று தாழையடி ஆழியவளையில்

# இன்று

## மீன்பிடி உபகரண விற்பனை

[நெல்லியடி]

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்களை அவர்கள் வாழும் பகுதிகளுக்கு நேரடியாக எடுத்துச் சென்று விற்பனைசெய்து வருகிறது.

இன்று செம்பியன்பற்று, தாழையடி, ஆழியவளைப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் விற்பனை செய்யப்படும்.

கடந்த வாரம் வல்வெட்டித்துறை, மாதகல் போன்ற பகுதிகளில் மீன்பிடி உபகரணங்கள் விற்பனைசெய்யப்பட்டன. மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை மேற்படி விற்பனையை ஆரம்பித்துள்ளது. [இ]

---

## சந்தேகநபர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த உத்தரவை சமர்ப்பித்து சந்தேகநபர் தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கத்தை சேர்ந்தவர் என்பதனால் அவர் அமைச்சின் உத்தரவிற்கிணங்க தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார். இதற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் சமூகமளித்த சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் "இந்த வகையான நபர்களை கைதுசெய்து நாட்டின் பாதுகாப்புக் கருதி தடுத்துவைக்கும் உரிமை பொலிசாருக்கு உண்டு" என்று வாதிட்டார்.

இதனை வன்மையாக ஆட்சேபித்த சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், நீதிமன்றத்தில் தவணையிடப்பட்ட சந்தேகநபரை எக்காரணம்கொண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப் படுவதிலிருந்து தடுத்துவைத்திருக்கமுடியாது என்றும். இது அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்றும் வாதிட்டனர். இதை நிராகரித்த நீதிபதி திரு. ஆனந்தகுமாரசாமி, சட்டத்திற்கு அமைவாக சந்தேகநபரை நீதிமன்றத்திற்கு கொண்டுவராததை ஏற்றுக்கொள்வதாகக் கூறி இம்மாதம் 23ம் திகதிக்கு தவணையிட்டார். விசாரணையைப் பார்ப்பதற்காக பெருந்திரளான மக்கள் நீதிமன்றத்தில் குழுமி இருந்தனர்.

---

## வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி— நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 5000க்கும் மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 23-5-79ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் 'தலைவர், கட்டைவேலி— நெல்லியடி ப. நோ, கூ. சங்கம் கரவெட்டி' என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,

கரவெட்டி,
10-5-79 2441

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

G. C. E வகுப்புத் தமிழ் மொழிப் பாடத்திற்கான நொடர்மொழிப் பொருளுக்கு ஒரு சொல் என்ற நூல் வெளிவந்துவிட்டது. விலைசதம் 75 தபால் மூலம் தனிப்பிரதி ஒன்று ரூபா ஒன்று வெளியீடு: தமிழ் வழற்சிக்கழகம் காரைநகர். கிடைக்குமிடங்கள்: சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் 2449

அண்மையில் வரவழைக்கப்பட்ட புதிய மொடல் சொனி ஸ்ரீறியோ கெசற் றெக்கோடர், நான்கு பகுதி, நான்கு ஸ்பீக்கர்கள் உடன் விற்பனைக்குண்டு. எஸ். நடராசா, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 2444

### பயிற்சி

16-22 வயதுடைய இளைஞர்கட்கு ஒரு வருட விவசாயப் பயிற்சி 1979 ஆனி மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும். ஊதியம்/ வேதனம் அடிப்படையில் இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் பெற்றோர்/ பராமரிப்பாளர் கடிதத்துடன் 26-5-79 க்கு முன்பு விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிறுவனம், யாழ். க.தொ.நு. & வி. நி. மருதனமடம், சுன்னாகம். 2446

### FOR SALE

430/T Compact Belling Cooker (Four Burner), Baby Belling Cooker (two), Deep Freezer (9.2 cu. ft.) L E C, Typewriter (Remington, Portable). Amirtham, Manipay. 2448

### காணவில்லை

நா. ஸ்ரீசங்கர் என்னும் 13 வயதுச்சிறுவனை 7-5-79 தொடக்கம் காணவில்லை. மாநிறம், இறுதியாக பிறவுன் கால்சட்டையும் மஞ்சள் சேட்டும் அணிந்திருந்தார், தயவு செய்து தகவல் அறிந்தோர் தொடர்பு கொள்ளவும். N. ப மூர்த்தி, 45, யமுனாவீதி, யாழ்ப்பாணம். 2445

### தவறிவிட்டது

ஏழு திறப்புகளைக் கொண்ட சாவிக் கொத்து 12-5-79 காலை 5-15 மணி யாழ்-காரைநகர்பஸ்ஸில் (சேவை இல: 784) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் என்னிடம் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். வே. பாலசுந்தரம், மாவட்டத்திப் பொறியியலாளர், அலுவலகம், யாழ்ப்பாணம். 2443

---

யாழ். மாவட்ட

## விவசாய செயற்படு திட்டம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தில் 1980-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் விவசாய அபிவிருத்திகள், உற்பத்தி இலக்குகள் ஆகியவற்றிலான புள்ளி விபரங்களைக் கொண்ட விவசாய செயற்படு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவின் உத்தரவைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள 17 கமநலச் சேவை நிலையங்களும் இவ் விவசாய செயற்படு திட்டத்தை கிராமிய மட்டத்தில் தயாரித்து வருகின்றன.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

ஈடு வழக்கு இல. 376.

இல. 18/2, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
சின்னத்தம்பி ஆறுமுகம் மகம்பெண் சிவநாயகி

-வழக்காளி

எதிராக

குளாவடி,
ஆனைக்கோட்டை.

1. சுந்தரம் டினகலாவும் பெண்
2. சிவமலரும் இருவரும்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 376-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதி (7-6-79) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 6930/-ம், 21-12-1976 தொடக்கம் ரூபா 4000/-க்கு இறுக்கப்படும் வரை 12 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 562-35 சதமும்;

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி கானிப்பாய் கோயிற்பற்று, ஆனைக்கோட்டை இறை "நாலுவராக்காடு" நிலப்பரப்பு 11 ½ம் செய் பயிர்களும் வீடும் கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கு தம்பிமுத்து பெண் இலிசபெத்துவினுதனம். வடக்கு சந்தையா பெண் மினுக்கம்மாவுக்கும் சபாபதிப்பிள்ளை பொன்னம்பலத்திலுரிமைக்காரருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு கையொழுங்கை முகப்பும் பொன்னம்பலம் முத்துக்குமாருவுக்கும் சாமுவேல் மகம்பெண் தங்கமுத்துவுக்குமுரிய ஆதனங்களும். தெற்கு குறித்த தங்கச்சியம்மாவினுதனம். இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 3-ம் கல்வீடு முற்றும் நிந்தமாகவும் கிணற்றில் பங்கும் மற்றும் இதற்குரியவைகளும். இதடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும்.

செ. பாண்டித்துரை,

கொமிஷனர் விலைமதிப்பாளர்.


மல்லாகம்,
30-4-79. 2443


# ரொக்குத்தயன்

500ஈசி

பயிர்களை அழிக்கும்

பீடைகளைக் கட்டுப்படுத்தும்



பயிர்களின் இலை தளிர்களை உண்ணும் பீடைகளை அழிக்க ரொக்குத்தயன் மிகவும் சிறந்தது. நெல், கோவா, உருளைக்கிழங்கு, அன்னுசி, மிளகாய், புகையிலை மற்றும் பயிர்களையும் தாக்கும் வெட்டுப்புழு, அழுக்கணவன் போன்ற பீடைகளையும் கட்டுப்படுத்தும். நம்பிக்கையான வியாபாரிகளிடமே கிடைக்கும்.

தரமான
BAYER
பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, யூனியன் வீதி, கொழும்பு 10.
தொலைபேசி : 93563, 96331-6

melADS

# 'தனிநாடு' கேட்காத காலத்திலும் 2 தடவை இனக்கலவரங்கள் நடந்தன

## ஐக்கிய இலங்கையையே நாம் அக்காலத்தில் விரும்பினோம்'

### சன்சோனிக் கமிஷன்முன் 'அமிர்'

[கொழும்பு]

கொழும்பு தேசிய நூதன சாலையின் விரிவுரை மண்டபத்தில், 1977 ஆகஸ்ட் கலவரங்கள் தொடர்பாக ஓய்வுபெற்ற பிரதமநீதியரசர் திரு எம் சி. சன்சோனி தலைமையில் விசாரணையை நடத்தி வரும்விசாரணைக் கமிஷன் முன் எதிர்க் கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் 8வது நாளாக சாட்சியமளித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் சட்டத்தரணி திரு. அண்டஷூட் மணிவாசகம் மறுவிசாரணை செய்தபோது திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது!

இம்மாதம் 8ம்தேதி "சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் குரண பொலிஸ் நிலையத்தில் பொலிசார் மீது குண்டுவீசப் பட்டதாக செய்தியொன்று வெளிவந்திருக்கிறது. வடபகுதியில் இச்சம்பவம் நடந்திருந்தால் இதுவும் 'புலி'களின் மற்றுமொரு நடவடிக்கை என்றே பொலிசார் கூறியிருப்பர்.

### பதவிகளுக்காக...

நாம் 19 தமிழ்த்தொகுதிகளிக்போட்டியிட்டு 18தொகுதிகளில் வெற்றி பெற்றோம் இருவர் பதவிகளுக்காக கட்சி மாறினர். இவர்கள் இன்று தமது 'எஜமானர்களை' கயை செய்யவேண்டிய நிலையிலிருக்கின்றனர்.

### பொலிசாரின் நடத்தை...

பாராளுமன்றத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் பொலிசாரின் நடத்தை பற்றி நான் பேசினேன். 1977 ஆகஸ்ட் 18ந் தேதி ஒத்திவைப்பு பிரேரணையின் போதும் ஆகஸ்ட் 23ந் தேதி அரசின்கொள்கைவிளக்க உரை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசும் போதும் டிசம்பர் 6ந்தேதி வரவு-செலவுத்திட்ட உரை மீதான குழுநிலை விவாதத்தின் போதும் நான் பேசினேன்.

### நான் கூறவில்லை

யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பொலிசார் கூட்டணிக்கு நிதி திரட்டுவதாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கூறியதாக இச் சந்தர்ப்பங்களில் ஒருபோதும் நான் குறிப்பிடவில்லை.

திரு ஏ ஸி. டி. சொய்சா இக்கமிஷன் முன் அப்படி நான் கூறியதாக-கூறியது தொடர்பாக நான் பாராளுமன்றத்தில் ஓர் உரிமைப்பிரச்சனை கிளப்பினேன். சிறப்புரிமைக் குழு இவ்விடயம் பற்றி ஆராய்ந்தபோது அக்குழு சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியது. சட்டமா அதிபர் இக்கமிஷன், பாராளுமன்றம் இரண்டுமே சிறப்புரிமை வாய்ந்தது என்பதால் எதைத் தீர்மானிப்பது என்று முடிவு செய்ய முடியாத நிலையில் அவ் விடயத்தை கைவிட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

பௌத்தமதம் தமிழ்மக்களின் கலாச்சாரத்துடனும் இணைந்ததாக இருந்திருக்கிறது. எல்லாளன் ஒருதடவை தனது தேரில் சென்றுகொண்டிருந்தபோது ருவான்வெலிசயா சுவர் ஒன்றில் அவனது தேர் முட்டியதில் 15 கற்கள் சேதமடைந்தன உடனே அவன் 15 ஆயிரம் செப்புக் காசுகளை வழங்கி அக்கற்களை மீள அமைக்குமாறு கூறினான் என்று மகாவம்சத்தின் 21ம் அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

### பௌத்த மதத்தை வெறுக்கவில்லை

நாம் பௌத்த மதத்தை வெறுக்கவில்லை ஆனால்பௌத்தத்துக்கு மாத்திரம் சலுகை அளிப்பதையே நாம் எதிர்த்தோம்-எதிர்க்கிறோம்.

சோல்பரி ஆணைக்குழு எந்த ஒரு மதத்துக்கும் விசேட சலுகை அளிக்கப்படக்கூடாது எனச் சிபார்சுசெய்தது ஆனால் 1972 அரசமைப்பில் பௌத்தத்துக்குமாத்திரம் சலுகையை அரசு அளித்தது சோல்பரிஅரசியலமைப்பு 29வது பிரிவின் கீழ் சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பு அளித்தது. அத்துடன் சிறுபான்மைஇனத்துக்கு சமபிரதிநிதித்துவம் ஏற்படும் வகையிலும் சோல்பரி அரசியலமைப்பு அமைந்திருந்தது.

### சோல்பரி அரசமைப்பில் சலுகை

இலங்கைத் தமிழர்கள் 15 பேரும், இந்திய வம்சாவளித் தமிழர் 14 பேரும், 8 முஸ்லிம்களும் இவர்களை விட சிறுபான்மை இனத்தவர் 6தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுமாக 101 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 43 சிறுபான்மை இனத்தவரின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் விதத்தில் சோல்பரி அரசமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதை அடுத்து இந்திய வம்சாவளித் தமிழர் தமது வாக்குரிமையை இழக்க அவர்களுக்கான 14 ஆசனங்களையும் சிங்களவர் கைப்பற்றினர் இதனால் மொத்த சனத்தொகையில் அப்போது 59 சதவிதத்தினராகவிருந்த சிங்களவர் பாராளுமன்றத்தில் 80 வீதமான ஆசனங்களைக் கொண்டிருந்தனர்.

கமிட: 6 நியமன உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டாரகளா?

அமிர்: சிறுபான்மையினருக்காகவே ஒதுக்கப்பட்ட அந்த 6 நியமன அங்கத்தவர் ஸ்தானங்களுக்கும் பின்னர் சிங்களவர்களே நியமிக்கப்பட்டார்கள். அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேலும் 8 தொகுதிகளை அமைக்கவும் சோல்பரி ஆணைக்குழு சிபார்சு செய்தது ஆனால் சிங்களக் குடியேற்றத்தால்

-- மாலி --

1500 ? சதுரமைல் பரப்பில் 2 தொகுதிகளை நாம் இழக்கவே செய்தோம். [சேருவில், அம்பாறை) இவ்வாறாக சோல்பரி ஆணைக்குழு அளித்த சட்ட, பிரதிநிதித்துவ பாதுகாப்புகள் அனைத்துமே முறியடிக்கப்பட்டன.

### வாக்குறுதிகளை மீறினர்

வாக்குறுதிகளை அளித்த தலைவர்களே பின்னர் அவற்றை மீறினார்கள். அதனால்தான் தமிழ்மக்கள் இன்று இந்நிலைக்கு தள்ளப்பட்டனர்.

சிங்கள அரசு என்று எமது விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் சுதந்திரத்திலிருந்து சிங்களமக்களின் எண்ணப்படிதான் அரசுகள் இயங்கி வருகின்றன.

முதலாவது அரசு இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமையை 1952 இல் பறித்தது, 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

### தமிழர் யாவரும் வெளியேறினா

ஐ தே. க இதைத் தீ மானித்த போது அக்கட்சியிலிருந்த சகல தமிழரும் ராஜினாமாச் செய்து வெளியேறினார்கள்,

பின்னர் பௌத்தத்துக்கு 1972 இல் முதலிடம் வழங்கப்பட்டது.

கடந்த தேர்தலில் எமது பிரதேசத்தில் கல்குடா தவிர ஒரு மக்களாணையை நாம் பெற்றோம் அவ்வாறே ஐ தே கவும் ஏனைய பிரதேசங்களில் மக்களாணையைப் பெற்றது ஆனால் ஆட்சிக்கு வந்த ஐ தே க அரசு, எங்கள் மக்கள் அளித்த ஆணைக்குச் செவிமடுக்காது, சிங்கள மக்கள் அளித்த ஆணையை மட்டுமே ஏற்று நடக்கிறது கடந்த 20 வருடங்களாக மந்திரிசபைக்கு எந்தவொரு தமிழரும் நியமனம் செய்யப்படவில்லை. செனட் சபையில் இருந்தவர்களே அமைச்சர்களாக இருந்தார்கள்.

### 24 ஆண்டுகள் தனி நாட்டை எதிர்த்தேன்

எனது 30 வருட அரசியல் வாழ்வில் 24 வருடம் தனி நாட்டுக் கொள்கையை எதிர்த்தே வந்திருக்கிறேன் சுதந்திரத்திற்கு முன், 1948 வரை தமிழ்மக்கள் ஐக்கிய இலங்கையையே விரும்பினார்கள்.

### சமஷ்டி பிரிவினையல்ல

சுதந்திரத்திற்குப் பின்னரே சமஷ்டி அமைப்பை நாம் கோரினோம். சமஷ்டி ஒரு போதும் பிரிவினையல்ல ஆனால் சகல சிங்கள அரசியல் கட்சிகளும் அவ்விதத்திலேயே சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தன.

1972ல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியல் நிர்ணயசபைக்கு அழைத்தபோதும் நாம் சமஷ்டி வரைவு ஒன்றையே அப்போது சமர்ப்பித்தோம்.

1976 வரை நாம் பிரிவினை எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை.

திரு. பண்டாரநாயக்கா, சில சக்திகள் அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தியதால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்

இத்தகைய சக்திகளே கலவரத்திற்கும் காரணம். 1977 கலவரத்திற்குத் தனிநாட்டுக் கோரிக்கை காரணமாக இருக்க முடியாது. நாம் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்த்து, ஐக்கிய இலங்கையை விரும்பிய காலத்திலும் 1956, 1958ல் கலவரம் நடந்தேயிருக்கிறது.

### மாவட்டசபை வழங்கச் சம்மதம் தரப்பட்டது

1965 மார்ச்சில் திரு என் வி. பி. பீரிஸ் இல்லத்தில் டட்லி-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது அதில் திரு ஜே ஆர் ஜயவர்த்தனவும் ஒப்பமிட்டிருந்தார் மாவட்ட சபைகள் வழங்குவதாக அதில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1971ல் அரசியல் நிர்ணய சபைக்கு நாம் சமர்ப்பித்த வரைவு அரசியலமைப்பு ஆலோசனைக்கே எடுக்கப்படவில்லை அரசியல் நிர்ணயசபையில் எமது திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டன.

### தமிழ்மொழி விசேட மசோதா நீக்கப்பட்டது

தமிழ்மொழி விசேட மசோதாவையாவது அரசமைப்பில் சேர்க்கும்படி நாம் கேட்டோம் ஆனால் அது அறவே நீக்கப்பட்டது.

இம்மசோதா எக்காலத்திலுமே அமுலாக்கப்படவில்லை

1971 ஜனவரி 6ந் தேதி திரு எஸ் ஜே. வி செல்வநாயகத்துடன் நானும், திருமதி சிறிமாவோவை இம் மசோதா தொடர்பாகச் சந்தித்துப் பேசினோம். ஆனாலும் பின்னர் எதுவுமே நடக்கவில்லை.

எமது 6 அம்சக் கோரிக்கையையும் அரசியல் நிர்ணய சபை ஆலோசிக்கவில்லை.

சர்வதேச யூரி சபைக்கும் தமிழர் கூட்டணி தமிழ்மக்களின் பிரச்சனைகள் குறித்து அறிவித்தது.

பொலிஸாருக்கும், அரசுக்கும் எதிராகத் தமிழ்மக்களின் மனப்பாங்கில் ஒரு திருப்புமையமாக 1974 தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவம் அமைந்தது. அரசு ஓர் அனுதாப வார்த்தைகூட, அச்சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கவில்லை.

### பேச்சுவார்த்தை மூலம் பிரச்னையைத் தீர்க்க முயற்சிக்கிறோம்

1976ல் நாம் தனிநாட்டுத் தீர்மானத்தை முன்வைத்தோம. இன்றும் நாம் பேச்சுவார்த்தை மூலமே நமது பிரச்னையைத் தீர்க்க முயற்சிக்கிறோம். நாம நேரடி நடவடிக்கையில் இறங்கும்போது அரசுக்கும் அதனை அறிவிப்போம் என்றே நான் பாராளுமன்றத்திலும் கூறியிருக்கின்றேன்.

நாம் சமஷ்டி கோரியபோதுங்கூட, எமது வழி, சாத்வீக வழியாகவே இருந்தது. தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தையும் நாம் சாத்திய வழியிலேயே மேற்கொண்டோம்.

6 அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் அரசு தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க முன்வராவிடின் நாம் சாத்வீக நேரடி நடவடிக்கையில் இறங்குவோமென அரசுக்கு நாம் அறிவித்திருந்தோம்.

[ம-இ]

[தொடரும்]

---

## மக்கள் கருத்து

### கோவில் முகப்பில் எச்சில் இலைகள்

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி சிவன் கோவில் முகப்பிலும் அதே வீதி கதிர் வேலாயுத கோவில் முகப்பிலும் சாப்பிட்ட எச்சில் இலைகளைக் கொண்டுவந்து கொட்டி விடுகிறார்கள், முனிசிபல் லொறி வந்து மாலையில் எடுக்கும்வரை அந்தவீதியால் போகமுடியாத நாற்றம் கடைக்காரர்களே தினமும் இப்படிச் செய்கிறீர்களே! உல்லாசப் பிரயாணிகளும் மூக்கைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள். அதுவும் யாழ்ப்பாண நகரத்திற்கும் அடுத்து சைவக் கோவிலுக்கும் எவ்வளவு பழிபாவம் செய்கிறோம் என்ற எண்ணம் இருக்குமேயானால் இப்படிச் செய்யமாட்டார்கள்.

மற்றும், விறகுகளையும் லொறிக் கணக்கில் வீதிஓரத்தில் பறித்து விடுகிறார்கள், இது வீதியின் அரைவாசி இடத்தைப் பிடித்துவிடுகிறது இதனால் போக்கு வரத்துக்குப் பெரிய இடைஞ்சல், இதை யாழ். விசேட ஆணையாளர் தேரில்வந்து பார்த்து ஆவன செய்வார் என நம்புகிறோம்,

கே. சண்முகராசா

நாச்சிமார்கோவிலடி.

---

### வில்லூன்றி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. வேட்டைத் திருவிழா இம்மாதம்23-ம்திகதி மாலையும், இரதோற்சவம் 24-ம் திகதி காலையும் மறுநாள் தீர்த்தஉற்சவமும் நடைபெறும்.

மேற்படி தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் உற்சவாசாரியாராக கடமையாற்றுவார். (அ)

---

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 1-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(15-5-1979)

**மேடம்:** இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும், நாடகக் கலைஞர்களுக்கு புதிய நண்பர்கள் சேருவர், எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்களுக்கான கரு கிடைக்கலாம்.

**இடபம்:** எதிரிகள் சூழ்ச்சி வலை விரிப்பார்கள், தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும், ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அரும்பிய காதல் இன்று கரும்புபோல் சுவைக்கும் பாரீர், விரும்பிய எண்ணம்போல் நல்லவை நடக்கும், காண்பீர்.

**கடகம்:** எக்கருமத்தையும் எண்ணித்துணிக, அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடும், நிதானம் வேண்டும்.

**சிங்கம்:** உறவுமுறை பலப்படும், உற்சாகம் பெருகும், புதிய நண்பர்கள் புடை சூழ்வார்கள், டலரின் வாழ்த்து முண்டு.

**கன்னி:** உறவினர்கள் பச்சைக்கொடி காட்டுவார்கள், புதிய தொழில்களில்

(5-ம் பக்கம் பார்க்க)

"தொகுதி நிர்ணயக் கமிஷன்முன்

# சாட்சியமளிக்க அமரர் ஜி. ஜி. கூட்டணிக் குழுவில் செல்லவில்லை

## தமிழ்க்காங்கிரஸ்சார்பில்தனியாகச்சென்றார்'

### பத்திரிகையாளர் மத்தியில் குமார்

[யாழ்ப்பாணம்]

கடந்த அரசாங்க காலத்தில் நீதியரசர் இத்தவலே தலைமையிலான தொகுதி நிர்ணய கமிஷன் முன், அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கூட்டணியினர் சாட்சியமளித்தனர். கூட்டணித் தலைவர்களில் ஒருவராக அமரர் ஜி ஜி. பொன்னம்பலம் தெரிவாகியிருந்த போதும், கொழும்பிலிருந்தும், அவர் செல்லவில்லை. தமிழ்காங்கிரஸ் சார்பில் தனியாகச் சென்று அமரர் ஜி ஜி, சாட்சியமளித்தார். அமரர் ஜி ஜி கூட்டணியை ஆதரிக்க வில்லை என்பதற்கு இது ஆதாரமாகும்.."

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம். பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

காங்கிரஸ் உபதலைவர் திரு. எஸ். ஆர் கனகநாயகம் தலைமையில் நடந்த இம் மாநாட்டில் திரு என் ரி சிவஞானம் திரு ரி மகேந்திரராசா, திரு விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"சிறிமா ஆட்சிக்காலத்தில் கூட்டணியினர், அரசுடன் பேச்சுவார்த்தைக்கு காத்திருந்தனர். அப்போது கூட்டணித் தலைவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டிருந்த அமரர் ஜி. ஜி. தமிழ் காங்கிரஸ் சார்பில நேராகச் சென்று சிறிமாவுடன் தமிழர் பிரச்சனை பற்றி பேசினார். அடுத்த நாள் திரு எம் சிவசிதம்பரம் தேர்தலில் தோல்வியடைந்த தலைவர்களுக்கு தமிழர் பிரச்சனைகள் பற்றி பேச்சு நடந்த அதிகாரம் இல்லை என்று அறிக்கை விட்டார். இதிலிருந்து அமரர் ஜி.ஜி. கூட்டணியை எந்தக் கட்டத்திலும் ஆதரிக்கவில்லை என்பது தெளிவாகிறது

நிருபர்: அமரர் ஜி ஜி பண்ணையத்தில் தமிழர் கூட்டணி மாநாடு நடந்தபோது வாழ்த்து அனுப்பினரே

குமார்: மாநாட்டுக்கு முதல் மாநாட்டை வாழ்த்தியே செய்தியனுப்பினர். கூட்டணி தலைவர்களில் ஒருவராக அவர் தெரிவான பின், வாழ்த்து அனுப்பவுமில்லை; அதனை ஏற்றுக்கொள்வதாக அறிவிக்கவுமில்லை,

நிருபர்; அப்படி யென்றால் ஏன் மறுத்து அறிக்கை விடவில்லை?

குமார்: தமிழர் ஒற்றுமையைக் குலைத்துவிட்டார் என்று மீண்டும் குறை சொல்வார்களே என்று பேசாமல் இருந்தார்.

நிருபர்: தமிழர் பிரச்னையை வட்டமேசை மாநாடு மூலம் தீர்க்கலாம் என்கிறீர்கள் அம் மாநாடு தோல்வியுற்றால்?

குமார்: சுயநிர்ணய அடிப்படையில் சுயாட்சி பெறுவோம்

நிருபர்: எத்தகைய சுயாட்சி?

குமார்; அதனை அந்தநேரம் தமிழர் முடிவுசெய்வர். பிரதேச சுயாட்சியா; தனித்தமிழ் ராஜ்யமா என்பதை மக்களே முடிவுசெய்வர்.

நிருபர்: வட்டமேசை மாநாடு நடைபெறுவிடின்!

குமார்: அது எப்போதும் நடக்கலாம் நாளையும் நடக்கலாம். அடுத்தமாதம் அல்லது அடுத்த வருடமும் நடக்கலாம் அதைப் பற்றி இப்போது சொல்லமுடியாது.

குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: வேலைவங்கி படிவங்களை கூட்டணியினர் சரியாக வழங்கவில்லை. திறமைசாலிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

"கொக்குவிலில் ஒரே வீட்டில் மூன்றுபேருக்கு கூட்டணியினர். வேலைவங்கிப் படிவம் வழங்கியுள்ளனர். அதே சமயம், திறமை மிக்க எத்தனையோ இளைஞர்களும் யுவதிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எதிர் அணியிலுள்ளவர்கள் மட்டுமல்ல, கூட்டணியிலுள்ள திறமைசாலிகளே புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்த் தொகுதியில் தராதரமுள்ள ஒரு பெண்ணுக்கு வேலைவங்கிப் படிவம் வழங்கப்படவில்லை. அப்பெண் கோப்பாய் எம்பியிடம் நேரில் சென்று கேட்டபோது அவர் நிதி அமைச்சர் திரு டி ரொனிடிமெல்லுக்கு, இப்பெண்ணுக்கு வங்கியில் வேலைவழங்குமாறு ஒரு சிபார்சுக்கடிதம் கொடுத்தார். அப்பெண் அக்கடிதத்துடன், நிதிமந்திரியிடம் சென்றபோது அவர் கடிதத்தை பார்த்த இப்பதவி வேலைவங்கி மூலமே வழங்கப்படும் எனக்கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

நிருபர்: திரு சங்கரப்பிள்ளை, தமிழ்காங்கிரஸ் தலைவர்பதவியிலிருந்து ஏன் வெளியேறினர்.

குமார்: யாழ்ப்பாணம் காங்கிரஸ் பட்டியலில் முதல் இடம் கிடைக்காததினால்

நிருபர்: பொதுத்தேர்தலில் கூட்டணியினர். டிக்கட் தராததினாலேயே நீங்களும் கூட்டணியிலிருந்து வெளியேறியது சரியென்றால் திரு சங்கரப்பிள்ளை செய்ததும் சரிதானே?

குமார்: அவர் செய்தது சரி அதனை தமிழ் காங்கிரஸ் செயற்குழுவே வரவேற்றது. அதை பிழையென்று சொல்லவில்லை.

ஆனால் கூட்டணிக்கு நான் டிக்கட் கேட்டு விண்ணப்பித்தபோதே. டிக்கட் கிடைக்காவிட்டாலும் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அறிக்கை விட்டிருந்தேன். அப்படியிருந்தும் என்னை கூட்டணி நியமனக்குழு நேர்முக பரீட்சைக்கு அழைத்தது.

நிருபர்: கூட்டணிக் கொள்கையை ஆதரித்தபடியால்தானே டிக்கட் கேட்டீர்கள்.

குமார்: அந்நேரம் கூட்டணி யாப்பு வெளியாகவில்லை. அது தேர்தலின் பின் தான் வெளியானது. தமிழரின் ஒற்றுமைக்காக விண்ணப்பித்தேன்.

நிருபர்: கூட்டணிக் கொள்கையை இப்போது ஏன் எதிர்க்கிறீர்கள்?

குமார்: "தமிழ் ஈழம்" என்ற போர்வையில் கூட்டணியினர் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

நிருபர்: நீங்கள் யூ என் பியையும், அரசையும் தாக்குவதில்லையே?

குமார்: ஒவ்வொரு கூட்டத்திலும் யூ என் பி யையும், அரசையும் தாக்குகிறேன் தரப்படுத்தல், அரசியலமைப்பு, திட்டமிட்ட குடியேற்றங்களை சுட்டிக்காட்டுகிறேன் தமிழரின் முதல் எதிரி யூ என் பி தான் சிறிமா கட்சியும் தமிழரின் எதிரிதான்

நிருபர்: தென்னிலங்கை வாழ் தமிழர்களுக்கு தேர்தலில் என்ன ஆலோசனை கூறுகிறீர்கள்?

குமார்: அவர்கள், அங்குள்ள நிலைமையை அறிந்து தங்கள் சொந்த விருப்பப்படி செயலாற்றுவார்கள்.

நிருபர்; கம்யூனிஸ்ட் கட்சியும், சில இடதுசாரிகளும் தமிழர் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கின்றார்களே?

குமார்: அப்படியான கட்சிகளைத் தெற்கில் ஆதரிக்குமாறு கூட்டணியினர் கூறியுள்ளனர். அதேசமயம் யாழ்ப்பாணத்தில், சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் கம்யூனிஸ்ட்கட்சியைக் கூட்டணியினர் எதிர்க்கின்றனர். தெற்கில் கம்யூனிஸ்ட்கட்சியை ஆதரிக்கின்றனர். எதற்காக இந்த இரட்டை வேடம்?

நிருபர்: தங்களைச் சிறில் மத்தியூவின் செல்லப்பிள்ளை என்றும் கூட்டணியினர் கூறுகிறார்களே?

குமார்: சிறில் மத்தியூவின் செல்லப்பிள்ளைகள் கூட்டணியினரே. கூட்டணி வேட்பாளர் பட்டியலில் உள்ள இரு

[5ம் பக்கம் பார்க்க]

காங்கிரஸ்' யாப்பு:

# மக்களாட்சியில் மனிதசமத்துவம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க்காங்கிரஸ் செயகுழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய யாப்பின் முற்பகுதி நேற்றுத் தரப்பட்டது. அதன் பிற்பகுதி வருமாறு:

ஜனநாயகம் அல்லது மக்களாட்சி என்ற புதிய தத்துவத்தில் தமிழ்க் காங்கிரஸ் பூரண நம்பிக்கை வைத்து அதன் முக்கிய அம்சங்களாகிய;

(அ) சுதந்திரமான இனிப்பின்றிய தேர்தல் முறை

(ஆ) எதிர்க் கட்சி இயங்குவதற்கு பூரண சுதந்திரம்.

(இ) சட்ட ரீதியான ஆட்சி.

(ஈ) சுதந்திரமான நீதிபரிபாலனம்.

(உ) அரசியல் சார்பற்ற பொது நிர்வாகம்.

(ஊ) தனிமனித சுதந்திரம்.

(எ) கருத்துப் பரிமாறும்சுதந்திரம்.

(ஏ) பத்திரிகைச் சுதந்திரம்

(ஐ) பொதுஜன அபிப்பிராயம் உருவாகும் வாய்ப்பு.

(ஒ) சாதி, மத, இன, சமூக வேறுபாடின்றி அனைவரும் சமமாக நடாத்தப்படல்,

என்பனவற்றை நிலைநாட்ட தீவிர முயற்சி செய்யும் என்று உறுதி கூறுகின்றது.

சமதர்மம் என்ற புனித தத்துவத்தை வலியுறுத்தி. தமிழ் காங்கிரஸ்

(அ) சாதி, மத, இன, சமூக வேறுபாடின்றி மனிதன் சமமாக நடாத்தப்படல்,

(ஆ) அனைவருக்கும் சமசந்தர்ப்பம் வழங்கல்,

(இ) சமூகாய நலனுக்கு முக்கியத்துவம் அளித்தல்,

(ஈ) நாட்டு வருவாயும், செல்வமும், நியாயமான முறையில் பங்கிடு செய்யப்படுவதற்கு வழிவகுத்தல்,

(உ) உழைப்புச் சந்தர்ப்பம் அனைவருக்கும் கிடைக்க ஆவன செய்தல்,

(ஊ) வல்லமையற்றவரை வலியார் சுரண்ட விடாமல் பாதுகாத்தல்

(எ) இதரபொதுவான சமூக நீதிகளைக் கடைப்பிடித்தல்,

ஆகிய இலட்சியங்களைக் கொண்ட அரசை நிலைநாட்ட முயற்சி செய்யும் என்று உறுதி கூறுகின்றது. [க-அ]




'அம்புஷ்'

கிருமிப் பீடைகளிலிருந்து உங்கள் பயிர்களைக் காக்கும்.

மயிர்க்குட்டி, வெட்டுப் புழு, தாவர மூட்டுப்பூச்சி, அந்துப் பூச்சி ஆகியவற்றை 'அம்புஷ்' பாவித்து அழியுங்கள்.

மீண்டும் மீண்டும் தெளிக்கும் தேவையைக் குறைத்து, நீண்ட காலம் கிருமிப் பீடைகளைச் சிறப்பாகக் கட்டுப் படுத்துவதில் 'அம்புஷ்' உத்தரவாதமானது.

விரைந்து செயற்படும் 'அம்புஷ்' பாவித்து உங்கள் வருவாய் பெருக வழி காணுங்கள்.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352, கொழும்பு.
தொலைபேசி: 28421

TAL 5147

ராஜா (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த ஒளிவிளக்கு ஈஸ்மன் கலர் புதிய பிரதி

தினசரி 4 காட்சிகள் மனோகரா (யாழ்நகர்) நாகேஷ்—கே. ஆர். விஜயா நடித்த நாணல் (புதிய பிரதி)

20-வது வாரம் வின்சர் (யாழ்ப்பாணம்) போன்: 660 தினசரி 4 காட்சிகள் 10-30, 2-00, 6-00, & 9-30 பைலட் பிரேம்நாத் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்.நகர்) கடைசி வாரம் ஜெமினி - சரோஜாதேவி - ரங்கராவ் குலவிளக்கு (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி: 2-30, 6-30 & 9-45 சனி, ஞாயிறு: 10-30, 2-30 6-30 & 9-45 ராமராவ் - அஞ்சலிதேவி பட்டி விக்கிரமாதித்தன் (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள் சிவாஜி—பத்மினி வியட்நாம் வீடு

மகத்தான வெளியீடு! சுமார் 80 லட்ச ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு!! இப்பொழுது காட்சிக்குக் காட்சி ஜனத்திரளுடன் காண்பிக்கப்படுகிறது. சாந்தி (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45 இராஜேந்திர குமார்-இரட்டை வேடங்களில் பிரமாதநடிப்பு ஹேமமாலினி—ஹிந்தித் திரைவானின்-கனவுக் கன்னி பானுரேகா—ஜெமினி கணேசனின்—மகள் இன்னும் பலர் நடிக்கும் இனிய ஈஸ்ட்மன்வர்ணத் திரையோவியம். "கோரா அவுர் காலா" இசை: லக்ஷ்மிகாந்த் பியரலால் காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பு-குதிரை ஓட்டங்கள் சண்டைக் காட்சிகள்.




ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-30, 6-15, 9-30. சொட்டலை நிறைந்த காட்சிகளாகக் காண்பிக்கப் படுகிறது. த டவரிங் இன் பேர்னே

# தனிநாயக அடிகளாரின் தமிழ்த் தொண்டை

# சந்திரகாந்தன் அடிகளார் தொடரவேண்டும்

## திருநிலைப்படுத்தும் விழாவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"கத்தோலிக்க குருமார்கள், தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டினைச் செய்திருக்கிறார்கள். என்பதனை தமிழ்க்கூறும் நல்லுலகம் அறியும். குறிப்பாக, அண்மைக் காலத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச அடிகளார், அவரைத் தொடர்ந்து பேரறிஞர் தனிநாயக அடிகளார் போன்றோர் தமிழ் மொழிக்கும் தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கும் செய்துள்ள அரும்பெரும் ஆக்கப் பணியை, உலகிலுள்ள எல்லாத் தமிழர்களும் அறிவார்கள். சுகபலம்குன்றி இன்பம் ஓய்வெடுக்கும் நிலைக்கு உந்தப்பட்ட அறிஞர் தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த் தொண்டை அருள்திரு. ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகளார் தொடர்ந்து செய்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று சந்திரகாந்தன் அடிகளார் குருத்துவத் திருநிலைப்படுத்திய விழாவில் அவரை வரவேற்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் அறைகூவல் விடுத்தார்.

இளவாலை புனித அன்னம்மாள் பேராலயத்தில் நடந்த இவ்வைபவத்தில், யாழ்.குடாநாட்டிலிருந்து பெருந்தொகையான கத்தோலிக்க மக்கள், குருமார், கன்னியாஸ்திரிகள் கலந்து கொண்டனர். இளவாலை மக்கள் சார்பில் ஒரு வரவேற்புப்பத்திரம் அடிகளாருக்கு வாசித்துக் கையளிக்கப்பட்டது.

குருவாக திருநிலைப்படுத்திய வைபவத்தை நடாத்திய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தமது தலைமையுரையில், சந்திரகாந்தன் அடிகளார் தமது உயர் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், ஒழுக்கப்பயிற்சியை புனித மடுத்தினர் குருமடத்திலும், குருத்துவக் கல்வியை இந்தியாவிலுள்ள புனித சின்னப்பர் கல்லூரியிலும் கற்று மெய்யியலில் முதுக்கலைப் பட்டமும் இறையியலில் இளங்கலைப்பட்டமும் பெற்றவர் என்றும் வித்துவான், கவிஞர் திரு. ச. அடைக்கல முத்துவின் மகனான இவரிடம் தமிழ் ஆர்வம் நிரம்ப உண்டு என்றும், இவரின் அறிவையும், கலைப்பின் தெளிவையும் 'இந்திய மக்களின் இறைவன்' என்ற ஒரு அரிய தத்துவ நூலை ஆக்கிய பெருமையால் அறியலாம் எனவும் குறிப்பிட்டார்.

அருள் திரு சந்திரகாந்தன் அடிகளார் தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றியுரை வழங்கினார்.

## இன்றைய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மனதைச் செலுத்துவீர்கள், இடம் மாறுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

**துலாம்:** விவசாயிகளின் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படலாம், எதிர்பார்த்த கடன் கிடைக்கும், சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு.

**விருச்சிகம்:** அற்ப விடயத்திற்கும் கூட ஆத்திரப்படுவீர்கள். மிகவும் வேண்டிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அடக்கம் நன்று.

**தனுசு:** பக்கத்தில் படுகுழி, பார்த்திருப்பவர்கள் பகைவர்கள், விழிப்புடன் இருப்பின் வெற்றியுண்டு.

**மகரம்:** நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள். தொழில் செய்யும் இடத்தில் பாராட்டுதல்களையும் பெறலாம்.

**கும்பம்:** நினைத்தது நடக்காது, நிம்மதி காற்றில் பறக்கும், நெடும் பயணத்தைக் கைவிடவும், பொருள் இழக்கூடும், அதிக சிந்தனையைத் தவிர்க்கவும்.

**மீனம்:** தகுதியில் முன்னேற்றம் உண்டு, வளமான வாழ்வு கிட்டும், எதிரிகள் பணிவர், எதிலும் வெற்றியுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

நாகம்ஸ் (கன்னாகம்) தினசரி 6-30 9-45 சனி, ஞாயிறு 2-30 தேங்காய்சீனிவாசன் சௌகார் ஜானகி அன்பின் அலைகள்

வெஸ்லி (சாவகச்சேரி) தினசரி 6-30, 9-45 சனி, ஞாயிறு 2-30 எம்.ஜி.ஆர்.-ராதாசலூஜா இதயக்கனி

Rio (Jaffna) Phone: 7607 Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m. Jim Brown in SLAUGHTERS BIG RIP OFF (Adults only)

## "புங்குடுதீவு

## தண்ணீர்ப் பஞ்சத்திற்கு உடன் தீர்வு காண்க"

(புங்குடுதீவு)

"புங்குடுதீவுப் பகுதி மக்கள் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினால் பெரிதும் இன்னலுறுகின்றனர். இப்பகுதி முழுவதும் நிலவும் கடுமையான வரட்சியினால் கால்நடைகள் தினசரி மரணிக்கின்றன. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணவேண்டுமென்று வற்புறுத்திவந்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. நிரந்தர பரிகாரம் கிடைக்குமட்டும் தற்போதைய கஷ்டமான நிலையைப் போக்குவதற்குச் சமூகசேவைப்பகுதி மூலமோ கிராமாட்சிமன்றம் மூலமோ வாகனங்கள் மூலம் வழமைபோல் குடிநீர் வழங்கப்படுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்."

ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு யாழ். அரசாங்க அதிபரைக் கடித மூலம் கோரியுள்ளார். இதன் பிரதிகள் தீவுப்பகுதி எம். பி.க்கும், சமூகசேவை அதிகாரிக்கும், புங்குடுதீவுக் கிராமசபை ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (அ)

## சாட்சியமளிக்க

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் அமைச்சர் சிறில் மத்தியூவிடம் கோட்டா எடுத்துள்ளனர். கூட்டணி வேட்பாளர் சோதிலிங்கம் ஒட்டுப்பலகைக் கோட்டாவும், கூட்டணிவேட்பாளர் கனகலிங்கம் பேப்பர் கோட்டாவும் அமைச்சரிடம் பெற்றுள்ளனர். கூட்டணிப் பட்டியலில் உள்ள சிறில், விற்பனை இலாகாவின் யூ என். பி.தொழிற்சங்கத் தலைவர். சிறில் மத்தியூ தலைமையில் உள்ள சம்மேளனத்தில் இச் சங்கம் இணைந்துள்ளது. உண்மைகளைச் சொல்கிறேன், மக்களே விசாரித்துப் பார்த்துத் தீர்ப்பளியுங்கள். தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கூறும் இளைஞர் பேரவை உறுப்பினர் சுந்தரலிங்கமும் கூட்டணிப் பட்டியலில் இருக்கிறார். (க)

## ஏழாலை வடக்கு மின்னொளியில் இன்றைய கரபந்தாட்டம்

(தெல்லிப்பழை)

ஏழாலை வடக்கு கலாநிதி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 4-ம் நாள் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன. ஓவர்கேம் 6 வீரர் போட்டியில் புத்தூர் மேற்கு கலைமதி 'ஏ' வி. கழகத்தை எதிர்த்து நீர்வேலி வடக்கு 'ஏ' ஐக்கிய வி. கழகமும், ஐக்கிய வி. கழகத்தை எதிர்த்து இணுவில் ராஜன் விளையாட்டுக் கழகமும் மோதவிருக்கின்றன.

4 வீரர் போட்டியில் புத்தூர் கலைமதி வி. கழகத்தை எதிர்த்து, நீர்வேலி வடக்கு "ஏ" ஐக்கிய வி. கழகமும் தையிட்டி "ஏ" ஈஸ்வரி வி. கவை. எதிர்த்து மயிலிட்டி வடக்கு பூமகள் வி. க வும், "டி" பிரிவில் ஆவரங்கால் புத்தூர் சர்வோதயா வி. க. வை எதிர்த்து வளர்மதி வி. க வும், செற்அப்" ஆட்டத்தில் தொண்டமனாறு இராணிவம்—ஆவரங்கால் ஐக்கிய வி. க வும் மோதவிருக்கின்றன.

## அதிபராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் உதவி அதிபராகப் பணியாற்றிய திரு. மு. நல்லையா கோப்பாய் சரவண பவானந்த வித்தியாசாலையின் புதிய அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சமய சமூக ஊழியருமான திரு மு நல்லையா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் பழைய மாணவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only [illegible]

Aladin and the Magic Lamp

From 16-5-79 PERCY'S PROGRESS (Color)

# "தமிழினத்தின் எழுச்சியை எவரும் தடுக்க முடியாது!"

## நல்லூர்க் கூட்டத்தில் 'சிவா'

[யாழ்ப்பாணம்]

''தமிழ் ஈழம் என்ற தமிழ் இனத்தின் எழுச்சிமிக்க இலட்சியத்தை எந்த தீயசக்தினாலும் தடுத்துவிட முடியாது. அடக்குமுறைகளையும், இனக்கலவரங்களையும் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் இன எழுச்சிக்கு எவரும் முட்டுக்கட்டை இட முடியாது''

நல்லூர் சந்தை மைதானத்தில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி யுமான திரு மு சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இன்று எம்மக்கள் மத்தியில் 'தார்மீகம்' பேசி வாக்கு கேட்க வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான் இந்த நாட்டில் தமிழருக்கு எதிராக இனக்கலவரம் மூண்டு அப்பாவித் தமிழனின் உயிரும் உடமைகளும் பறிக்கப்பட்டு பரிதாபகரமாக நின்ற வேளையில் ''போர் என்றால் போர்'', ''சமாதானம் என்றால் சமாதானம்'' என்று இரக்கமற்றுக் கூறிய இவரா? தமிழன் பிரச்னைகளைத் தீர்க்கப் போகின்றார்.

''போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' என்று திரு ஜே. ஆர். பேசிய இருபத்திநான்கு மணித்தியாலங்களில் இந்த நாட்டில் ஒருபெரும் பூகம்பமே வெடித்தது. இதை தமிழினம் மறந்துவிட முடியுமா?

தமிழ் மாணவர்கள் தமது உயிரையே பணயம் வைத்து பரீட்சை எழுதும்போது அமைச்சர் சிறில் மத்யூ போன்றவர்களால் அவர்கள் திறமை முறியடிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சிறில் மத்யூவின் ஐக்கியதேசியக் கட்சிக்கு வாக்களிப்பது எமது இனத்தை மாற்றானிடம் விற்பதற்குச் சமமானதே''

ஆசிரியர் ஜனாப் ஷாகுல் ஹமீத் பேசுகையில், இந்த நாட்டில் தமிழ்மொழியைப் பேசுகின்ற ஒரே காரணத்திற்காக முஸ்லிம் சகோதரர்கள் நசுக்கப்படுகிறார்கள். சென்ற இனக்கலவரக் காலத்திலே யாழ்ப்பாணத்தில் நற்பத்தைந்து முஸ்லிம் சகோதரர்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு, அல்லலுற்று முஸ்லிம் சகோதரர்கள் அநாதரவாக நின்றபோது அவர்களின் பிரதிநிதியாக அமைச்சர் ஜனாப் முகமட்டை சந்திக்க மூன்று மணி நேரம் காத்துக் கிடந்தவன் நான். அந்தச் சந்தர்ப்பத்தில் தன் இனத்தின்மீது இரக்கமோ அக்கறையோ காட்டாது இருந்தவர் இந்த அமைச்சர் முகமட், அது மட்டுமல்ல உலக சாதனையை ஒருமுஸ்லிம்சகோதரன் முடித்தபோது அவனைவாழ்த்த இவர்களில் எவர் முன்வந்தனர். இன்று இவற்றை எல்லாம் மறந்து எந்த உரிமையோடு எமது இனத்தின் முன் வாக்குக் கேட்க வந்திருக்கிறார்கள்'' என்றார். [கா]

# "முஸ்லிம்மக்களுக்குஎன்றும் உதவியது காங்கிரஸ்தான்"

## ஐந்து சந்திக் கூட்டத்தில் குமார்

(யாழ்ப்பாணம்)

''முஸ்லிம் கலாச்சார பல்கலைக்கழகம் வேண்டுமென்று பாராளுமன்றத்தில் மூதூர் எம் பி ஜனாப் எம் ஈ எச் முகமது அலி பிரேரணை கொண்டு வந்து முன்மொழிய, அமரர் ஜி ஜி பொன்னம்பலம் வழிமொழிந்தார். வாக்கெடுப்பு நேரத்தில் தமிழரசுக் கட்சி எம் பிக்கள் வெளிநடப்புச் செய்தனர், இப்படிப்பட்டவர்களா முஸ்லிம்களின் நலன்களைக் கவனிக்கப்போகிறார்கள்?''

யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார். ஜனாப் எம் வி ஏ கையூம் தலைமையில் நடந்த கூட்டத்தில் குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

''இலங்கைத் தேசியக்கொடியில் அமரர் ஜி ஜி பொன்னம்பலம் வாதாடி தமிழருக்கு ஒரு நிறமும் முஸ்லிம்களுக்கென பச்சைநிறக் கோட்டையும் பெற்றுக்கொடுத்தார். அந்தப் பச்சைநிறம் தமிழ்க்காங்கிரஸ் நான்குவர்ணக் கொடியில் உண்டு. ஆனால் கூட்டணியின் 'உதயசூரியன் கொடியில் பச்சைநிறம் இல்லை.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மகனான நஸீர் டுவிஸ்ட்டில் உலகசாதனையை நிலைநாட்டினார். ஒருவாரம் கூட ஆகவில்லை, கொடிகாமத்தில் மற்றொரு இளைஞர் டுவிஸ்ட் ஆடியபோது அதற்கு கூட்டணியினர் முழு ஆதரவும் கொடுத்தனர். யாழ் எம் பி திரு யோகேஸ்வரன் வாழ்த்துச் செய்தி அனுப்பினார், கிளிநொச்சி எம் பி திரு ஆனந்தசங்கரி நேரில்சென்று பாராட்டினார். யாழ் கூட்டணி பட்டியலில் உள்ள திரு ஆ ஆரைராஜசிங்கம் நேரில சென்று பாராட்டினார்.

நஸீரின் சாதனையை சரிவர அனுபவிப்பதற்கு முன் கூட்டணியினர் ஏன் கொடிகாமத்தில் இன்னொரு இளைஞரை ஆடத்தூண்டினார்கள்? இதனை முஸ்லிம்மக்கள் சிந்திக்கவேண்டும். சீமெந்துத் தொழிற்சாலையில் வேலைசெய்த தமிழ் பேசும் இளைஞர்களை திரு அமிர்தலிங்கம் திற்பாட்டினார். அதில் ஐந்து முஸ்லிம் இளைஞர்களும் வேலை இழந்தனர்.

''மட்டக்களப்பு இரட்டைத் தொகுதி தமிழருக்கு ஒன்று முஸ்லிம்களுக்கு ஒன்றுமென பிரிக்கப்பட்டது. கடந்த தேர்தலில் கூட்டணியினா முஸ்லிம்களைப் புறக்கணித்து காசிஆனந்தனையும், திரு இராசதுரையையும் நிறுத்தினார்கள் இத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ்தான் முஸ்லிம்களுக்கு பட்டியலில் மூன்றாமிடத்தை கொடுத்துள்ளது. கூட்டணி எட்டாம் இடத்தையே கொடுத்துள்ளது. முஸ்லிம் மக்களுக்கு என்றும் தமிழ்க்காங்கிரஸ்தான் உதவியது. (கொ)

# 'ஒத்துழைப்பு இல்லாததால் வடக்கு முன்னேறவில்லை'

## பொம்மைவெளியில் அமைச்சர் முஹம்மது

[யாழ்ப்பாணம்]

''வடபகுதி மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட எம் பிக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவில்லை. அதனால் தமிழ்ப் பகுதி முன்னேறவில்லை. எனவே தமிழ் மக்களுக்கு அரசைக் குறைசொல்ல உரிமையில்லை.''

பொம்மைவெளியில் நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச் முஹம்மது பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்,

ஜனாப் எம். எம் நூர்முகம்மது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் முஹம்மது தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''வடபகுதி முன்னேறவேண்டுமானால் கிழக்குமாகாண மக்கள் செய்ததுபோல வடபகுதி மக்களும் இன, மத, மொழி பேதமற்ற தேசியக்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியை ஆதரித்து நடைபெற இருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு உங்கள் வாக்குகளை அளித்து எமது கட்சியினரிடம் ஆட்சியை ஒப்படைத்து நகரை முன்னேற்றுங்கள். எம்மிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட பின்னர் நகர் முன்னேறவில்லை என்றால் நீங்கள் குறை கூற உரிமையுள்ளவர்கள், உங்களது குறைகளைத் தீர்த்து வைப்பது எங்கள் கடமை. அதற்கு ஒரு சந்தர்ப்பம் எதிர்வரும் 19ம் திகதி. அதைத் தமிழ்பேசும் மக்கள் தவற விட்டுவிடக்கூடாது.

''வடபகுதி மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக கிழக்கு மாகாண மக்கள் வாழ்கிறார்கள் கிழக்கில் இருவரைத் தவிர ஏனைய எம் பிக்கள் அரசை ஆதரிக்கிறார்கள். அதனால் கிழக்கு முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. கிழக்குமாகாணத் தமிழ்மக்களுக்கு அரசுமீது நம்பிக்கை இருக்கிறதென்றால் ஏன் வடபகுதி தமிழர் அரசை ஆதரிக்கக்கூடாது?

''முஸ்லிம் ஒருவர் கூட்டணி வேட்பாளராக நின்றால் அவர் ஒரு துரோகி முஸ்லிம்களின் நாடு இலங்கை அந்த இலங்கையைத் துண்டாட விரும்பும் கூட்டணியில் சகோதரத்துவத்தைப் போதிக்கின்ற இஸ்லாம் மதத்தைச்சேர்ந்த எவரும் சேரமாட்டார்கள் அக்கட்சியை ஆதரிக்கவும் மாட்டார்கள்'' என்று கூறினார்.

யாழ் மாவட்ட அமைச்சர்

யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் பேசுகையில்' உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியினரிடம் ஆட்சியை ஒப்படைத்தால்தான் இந்தநாட்டை முன்னேற்றமுடியும், எமது நாட்டு அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான பணத்தை உள்ளூராட்சி மன்ற அமைச்சரிடமும் நிதி அமைச்சரிடமும் இருந்துதான் பெறவேண்டும், உள்ளூராட்சிச் சபையில் ஐக்கியதேசியக் கட்சியினர் இருந்தால் நானும் அவர்களும் ஒன்றாகச் சேர்ந்து அமைச்சர்களிடம் இருந்து தேவையான பணத்தைப் பெற்று நாட்டை முன்னேற்ற முடியும். அரசை எதிர்க்கும் கூட்டணியினர் உள்ளூராட்சி மன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டால் அரசாங்கத்திடமிருந்து நாம் எதுவித சலுகைகளையும் பெறமுடியாது. அதனால் நாடு இன்று இருக்கும் நிலையில்தான் எதுவித முன்னேற்றமும் இன்றி இருக்கும், நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை உள்ள எவரும் கூட்டணியை ஆதரிக்கமாட்டார்கள்,

பொம்மைவெளிக் குடியேற்றத்திட்டமும், கமாக்லேன் குடியேற்றத்திட்டமும் முன்னேற இங்கு ஒரு கைத்தொழிலை ஆரம்பிக்கவேண்டுமானால் முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக்கட்சியினரை ஆதரியுங்கள்.'' (கொ)

# சஞ்சீவரெட்டி இலங்கை வருகிறார்

[கொழும்பு]

இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி இலங்கைக்கு உத்தியோக விஜய மொன்றை மேற் கொள்ள விருக்கின்றார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அழைப்பை ஏற்றுத் திரு. சஞ்சீவரெட்டி ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ். குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபையால் எட்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள யாழ். குடிநீர் விஸ்தரிப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லை மாநகர ஆட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. சே. சிவஞானம் இன்று மாலை திருநெல்வேலியில் நாட்டிவைப்பார்.

தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. செ இராசரத்தினம் தலைமையில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும். தேசிய நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் திரு. சா, பாலமுத்துலிங்கம் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். [கொ]

# காங்கேசன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நேற்று நடைபெற்ற ஏற்றுமதிவேலைகளை கப்பல் ஏஜெண்டுகளான க. ஜெயபாலசிங்கம் கம்பனியார் பொறுப்பேற்றுள்ளனர். இதேபோலமாதம் ஒரு கப்பல் இவ்வாறன பொருட்களை ஏற்றிக்கொண்டு மாலைதீவுக்கு காங்கேசன் துறையிலிருந்து செல்லும் என நம்பப்படுகிறது

# பேராசிரியர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகம் இராமநாதபுரம் மாவட்ட ஆத்தன்குடி எனும் ஊரில் பிறந்த இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்று அப்பல்கலைக்கழகத்திலேயே 1960-ம் ஆண்டு முதல் 18 ஆண்டு காலமாக ஆசிரியப் பணி ஏற்றிருக்கிறார். தமிழ் நாட்டுப் பாடல்களைப் பற்றி ஆய்வு எழுதி எம். லிட் பட்டம் பெற்று தமிழ் நாடகத் துறை ஆய்வுக்காக பி ஹெச் டி பட்டமும் பெற்றுள்ளார். இதுவரை 50 தமிழ் நாடக நூல்கள் எழுதியிருக்கும் இவர் ''சாட்டயர்'' என்று ஆங்கிலத்திலும் 'அங்கதம்' என்று தமிழிலும் அழைக்கபடுவதனை எள்ளல் என்று மொழி பெயர்த்து குறுநாடகங்களாகப் படிப்பவரின் சிந்தனையைத் தூண்டிவிடும் வகையில் நாடகங்களை எழுதியுள்ளார்.

இவரின் எள்ளல் நாடகங்கள் சித்திரமலர், மேடை நாடகங்கள், திருமலைநாயக்கர், நாடகச் செல்வம், திருவள்ளுவர் நாடகம், கருவேப்பிலை, முத்துச் சிப்பி போன்ற நாடகங்கள் தமிழ் இலக்கிய ஆர்வலர்களையும் பல்கலைக்கழகங்களையும் வெகுவாகக் கவர்ந்தன. 'நாடகச் செல்வம்' என்ற நூல் சென்னை, திருவனந்தபுரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பி. ஏ, நிலை மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாகியுள்ளது. 'நாடக விருந்து' என்ற நூல் பெங்களூர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும், திருமலை நாயக்கர், எள்ளல் நாடகங்கள் முறையே அண்ணாமலை மதுரைப் பல்கலைக்கழகத்திலும் பாடப்புத்தகமாகியுள்ளன.

இவை தவிர பல்வேறு இலக்கிய மொழிக் கருத்தரங்குகளிலும் ஆசிரியர் மாநாடுகளிலும் பங்கேற்றிருக்கும் டாக்டர் ஆறு. அழகப்பன் யாழ். பல்கலைக்கழகத்திலும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் மற்றும் பல முக்கிய கல்லூரிகளிலும் இறப்புரைகள் ஆற்றுவார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8943/73 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu!
[illegible] 889,